# காத்தான்குடி நகரசபை

## மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 13 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 24 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 11 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய காத்தான்குடி நகர சபையானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய காத்தான்குடி நகரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் தொடர்பில் மீளமைப்பு ஒதுக்கத்திற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் கையிலுள்ள களஞ்சிய இருப்புகளின் பெறுமதி புத்தகப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்ததுடன் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 23,198 தொகையான நூலக புத்தக இழப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2. நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய பணம் பின்வருமாறு உள்ளன.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப்பணங்கள் | 476,333 |
| (ii) | முத்திரைக் கட்டணங்கள் | 23,158,157 |

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கேள்வி நடைமுறை / கூறுவிலை நடைமுறை பின்பற்றாமல் கிராம மட்டத்தில் திட்டமிடல் கூட்டங்களிற்காக மீளளிப்பு மீதான செலவின மீளளிப்பாக சபையின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 66,600 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப்பயன்படுதிய பௌதீக வளங்கள்

திருகோணமலை சீனக்குடாலில் கைவிடப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்துப் பெரியொன்றிகாக தனியார் கம்பனிக்கு ரூபா 323,550 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரு ஆண்டிற்கு மேல் பயனற்று இருக்கின்றன.

### 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ திறமையீனங்கள்

சபையின் வாகனப் பாவணைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) ஒவ்வொரு வாகனங்களதும் எரிபொருள் நுகர்வு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் காலரீதியாக பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் நீண்டகாலமாக திருத்தத்தின் கீழ் இருந்தது.

(இ) 12 உழவு இயந்திரங்கள் மற்றும் இழுவை வண்டிகள் நல்ல நிலையில் இருந்த போதும் இது ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கீழே தரப்பட்ட விபரங்களின்படி நீண்டகாலமாக ஓடும் நிலையில் இல்லாத வாகனங்கள் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.